செய்தி வெளியீடு எண்: 911 நாள்: 15.10.2010

# விவசாய மின் இணைப்பு கோரி நிலுவையில் உள்ள 2 இலட்சம் விண்ணப்பதாரர்களுக்கு மின் இணைப்பு!

## முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு!

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் 40 ஆயிரம் விவசாய மின் இணைப்புகள் அளிக்கப்படுகின்றன.

தற்போது விவசாய இணைப்பு கோரி சுமார் 4 இலட்சத்து 85 ஆயிரம் விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. ஆண்டுக்கு 40 ஆயிரம் இணைப்புகள் வீதம் நிலுவையில் உள்ள அனைத்து விண்ணப்பங்களுக்கும் இணைப்பு வழங்க குறைந்தபட்சம் 12 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் ஆகும்.

விவசாயிகளின் நலன் கருதி, 10 வருடங்களுக்கு மேல் நிலுவையில் உள்ள சுமார் 2 இலட்சம் விண்ணப்பதாரர்களுக்கு மின் இணைப்பு வழங்க தமிழ்நாடு மின்சார வாரியம் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமென்று முதலமைச்சர் கலைஞர் இன்று (15.10.2010) அறிவித்துள்ளார்.

அதன்படி, முதல் 50 ஆயிரம் விண்ணப்பங்களுக்கு 2010 டிசம்பர் மாதத்திற்குள்ளும்; அடுத்த 50 ஆயிரம் விண்ணப்பங்களுக்கு 2011 மார்ச் மாதத்திற்குள்ளும்; அதற்கடுத்த 50 ஆயிரம் விண்ணப்பங்களுக்கு 2011 சூன் மாதத்திற்குள்ளும்; எஞ்சிய 50 ஆயிரம் விண்ணப்பங்களுக்கு 2011 செப்டம்பர் மாதத்திற்குள்ளும் மின் இணைப்பு வழங்க தமிழ்நாடு மின்சார வாரியம் உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

* * *

வெளியீடு:–

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9